**ක්‍රිස්තියානි ආගමික කටයුතු දෙපාර්තමේන්තුව**
கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம்
**Department of Christian Religious Affairs**

බයිබල් දැනුම මිනුම ලිඛිත විභාගය 2025 | 4,5
திருவிவிலிய அறிவுப் போட்டி 2025 | 4,5
Bible Quiz Written Examination 2025 | 4,5

පැය : 1
நேரம் 1
Hour : 1

**සියළුම ප්‍රශ්න වලට පිළිතුරු මෙම පත්‍රයේම සපයන්න.**/ எல்லா வினாக்களுக்குமான விடைகளை இந்த வினாத்தாளிலேயே விடையளிக்கவும் / Answer all the questions in the space provided

විභාග අංකය
பரீட்சை எண்
Index No

.............................................
ශාලා නිරීක්ෂකගේ අත්සන /
மண்டப மேற்பார்வையாளரின் கையொப்பம்.
/ Signature of the Invigilator

**උපදෙස් / அறிவுறுத்தல்கள் / Instructions**

- මෙම පිටුවෙත් සියලුම පිටුවලත් ඔබගේ විභාග අංකය නිවැරදිව ලියන්න / இந்த பக்கத்திலும் சகல பக்கங்களிலும் உங்கள் பரீட்சை எண்ணை சரியாக எழுதவும். / Write your Index number correctly on this page and on all other pages
- 01 සිට 10 වඩාත් සුදුසු පිළිතුර යටින් ඉරක් අඳින්න. / 01 முதல் 10 வரை பொருத்தமான விடையின் கீழ் கோடிட்டுக் காட்டுக. / Underline the most appropriate answer to question 01 to 10
- 11 සිට 45 දක්වා ප්‍රශ්න වලට නිවැරදි පිළිතුරු සපයන්න. / 11 முதல் 45 வரையான வினாக்களுக்கு சரியான விடை அளிக்கவும் / Give correct answers to question 11 to 45
- 46 සිට 50 දක්වා සුදුසු වචන යොදා හිස්තැන් පුරවන්න. / 46 முதல் 50 வரை பொருத்தமான வார்த்தையை வைத்து இடைவெளியை நிரப்புக. / Fill in the blanks from 46 to 50 using the appropriate words

**For Examiner's use only**

| Page | Marks |
|---|---|
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |
| 7 | |
| 8 | |
| **TOTAL** | |

Examined by:

Checked by :

Index Number ……………………………………….. Marks

**மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

01. இறைவாக்கினர் எலியா எந்த இனத்தை சேர்ந்தவர்?

a. அமோரிய இனத்தவர் b. திஸ்பே இனத்தவர்
c. கானானிய இனத்தவர் d. பெலிஸ்தியர்

02. எக்ரோனின் தெய்வம் எப்பெயரால் அழைக்கப்பட்டது?

a. பெயர்செபூல் b. ஐம்பதின்மர்
c. பாகால் செபூ d. யோசபாத்து

03. ஆண்டவர் எலியாவை சுழல்காற்றில் விண்ணுக்கு எடுத்துக்கொள்ள இருந்தவேளை அவர் எலிசாவுடன் புறப்பட்டு சென்ற இடம் எது?

a. கில்கால் b. ஜெரிகோ c. பெத்தேல் d. யோர்தான்

04. யோராம் சமாரியாவில் இருந்தவாறு எத்தனை ஆண்டுகள் இஸ்ரயேல் மக்களை ஆட்சிசெய்தான்?

a. பத்து ஆண்டுகள் b. பதினொரு ஆண்டுகள்
c. பன்னிரண்டு ஆண்டுகள் d. பதிமூன்று ஆண்டுகள்

05. இறைவாக்கினர் எலிசா தன்னை உபசரித்த சூனேமியப் பெண்ணுக்கு அளித்த வாக்குறுதி என்ன?

a. ஒரு நாடு b. பரம்பரை c. கட்டளை d. மகன்

06. சிரிய மன்னனின் படைத்தலைவன் யார்?

a. தாவீது b. மோசே c. எரேமியா d. நாமான்

07. இயேசு தம் சீடர்களுக்கு கற்றுக்கொடுத்த செபமாவது

a. ஒற்றுமைக்கான செபம் b. இயேசு கற்பித்த செபம்
c. மங்கள வார்த்தை செபம் d. நம்பிக்கை அறிக்கை

08. “விண்ணகத் தந்தை தம்மிடம் கேட்போருக்கு ………................……….. கொடுப்பது எத்துணை உறுதி” இடைவெளி நிரப்புக.

a. தூய ஆவியை b. ஞானத்தை c. மகப்பேற்றை d. விடுதலையைக்

09. உங்கள் உடலுக்கு விளக்காய் இருப்பது எது?

a. வாய் b. கண் c. காது d. மூக்கு

10. “உங்கள் செல்வம் எங்கு உள்ளதோ அங்கே உங்கள்………...........……… இருக்கும்.”

a. உடலும் b. வீடும் c. மகிழ்ச்சியும் d. உள்ளமும்

Index Number ………………………………………… Marks

**சுருக்கமான விடை எழுதுக.**

11. 2அரசர்கள் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் படி இறைவாக்கினர் எவ்வாறானஆடைகளை அணிந்திருந்தார்?

………………………………………………………………………………………………

12. இறைவாக்கினர் எலியா விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன் எலிசா அவரிடம் என்ன கேட்டார்?

………………………………………………………………………………………………

13. இறைவாக்கினர் எலிசா நாமான் நோயிலிருந்து சுகம் பெற என்ன செய்ய வேண்டும் என அவனிடம் கூறினார்?

………………………………………………………………………………………………

14. நாமான் இறைவாக்கினர் எலிசாவிடம் செல்லும்போது தன்னுடன் எடுத்துச் சென்றவை எவை?

………………………………………………………………………………………………

15. நாமானிடமிருந்து வெள்ளி மற்றும் பரிசில்களை பெற்றுக்கொண்டதனால் பணியாளன் கேகசிக்கு என்ன தண்டனை கிடைத்தது?

………………………………………………………………………………………………

16. யோர்தான் ஆற்றில் விழுந்த கோடரியை இறைவாக்கினர் எவ்வாறு மீட்டெடுத்தார்?

………………………………………………………………………………………………

17. சிரிய மன்னன் இஸ்ரயேலரின் இறைவாக்கினரை கைதுசெய்யும் நோக்குடன் அவர் எங்கிருக்கிறார் என்று பணியாளர்களை வினவிய போது கிடைத்த பதில் என்ன?

………………………………………………………………………………………………

18. எலிசாவின் பணியாள் வைகறையில் எழுந்து வெளியே வந்தபோது எதனைக் கண்டார்?

………………………………………………………………………………………………

19. சிரிய படையில் இணைந்து கொள்வதற்காக நகர வாயிலின் அருகே இருந்தவர்கள் யாவர்?

………………………………………………………………………………………………

20. அரசன் யோராமின் பின்னர் ஆட்சி செய்த அரசன் யார்?

………………………………………………………………………………………………

21. 2அரசர்கள் 1-8 அதிகாரங்களில் எலிசா செய்த புதுமைகள் இரண்டு எழுதுக.

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

Index Number …………………………………………    Marks

22. காணாமல் போன மகன் உவமையில் தந்தையின் வீட்டிற்கு மீண்டும் வருகைத்தந்த இளையமகனை கண்ட தந்தை பணியாளர்களை வரவழைத்து கூறிய விடயங்களில் இரண்டைக் குறிப்பிடுக?

……………………………………………………………………………………………

23. காணாமற் போன திராக்மா உவமையில் எதைக்குறித்து கடவுளின் தூதர்களிடையே மகிழ்ச்சி உண்டாகும் எனக் கூறப்பட்டுள்ளது?

……………………………………………………………………………………………

24. இயேசு கிறிஸ்து கூறியதன் படி "………………………………………… எனக்கு சீடராய் இருக்க முடியாது" (இடைவெளியை நிரப்புக)

25. திராட்சை தோட்டத்திற்கு பொறுப்பாளர் கனிதராத அத்திமரத்தை வெட்டிவிடும்படி தொளிலாளரிடம் கூறியதற்கு அவர் அளித்த பதில் என்ன?

……………………………………………………………………………………………

26. இயேசுவால் ஓய்வு நாளில் குணமாக்கப்பட்ட உடல் ஊனமுற்றிருந்த பெண் எத்தனை ஆண்டுகளாய் சுகவீனமுற்றிருந்தார்? அவர் உடல் நலம் குன்றியமைக்கான காரணம் யாது?

……………………………………………………………………………………………

27. இயேசு இறையாட்சியை எதற்கு ஒப்பிடுகிறார்?

……………………………………………………………………………………………

28. எந்த பாவம் செய்தால் மன்னிப்பு இல்லை எனக் கூறப்பட்டுள்ளது?

……………………………………………………………………………………………

29. "நீங்கள் ஆயத்தமாய் இருங்கள்" இயேசு இவ்வாறு கூற காரணம் என்ன?

……………………………………………………………………………………………

30. இயேசு ஓய்வு நாளில் குணப்படுத்திய நோயாளர்கள் இருவரைப் பெயரிடுக.

……………………………………………………………………………………………

31. "தந்தை ஆபிரகாமே! எனக்கு இரங்கும் இலாசர் தமது விரல் நுனியைத் தண்ணீரில் நனைத்து எனது நாவை குளிரச் செய்ய அவரை அனுப்பும்" இக்கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?

……………………………………………………………………………………………

32. தன் மனைவியை விலக்கிவிட்டு வேறொரு பெண்ணை மணப்பவன் எவனும் செய்கின்ற பாவம் என்ன?

……………………………………………………………………………………………

Index Number ………………………………………… Marks

33. நாம் பேறுபெற்றவராய் இருப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என இயேசு கூறுகின்றார்?

…………………………………………………………………………………………..

34. இயேசுவிடம் கூடிய மக்கள் கூட்டத்தைப் பார்த்து "இந்த தீய தலைமுறையினர் என அவர் கூறுவதற்கான காரணம் யாது?

…………………………………………………………………………………………..

35. பரிசேயர்கள் எதற்கு ஒப்பிடப்படுகிறார்கள்?

…………………………………………………………………………………………..

**யாரால் யாருக்கு கூறப்பட்டது**

36. "நீ போய் யோர்தானில் ஏழுமுறை மூழ்கினால் உன் உடல் நலம் பெறும்"

…………………………………………………………………………………………..

37. "உன்னிடமிருந்து எடுத்துக்கொள்ளப்படும் முன் நான் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்று சொல்"

…………………………………………………………………………………………..

38. "தாங்க முடியாத சுமைகளை மக்கள் மேல் சுமத்துகிறீர்கள்"

…………………………………………………………………………………………..

39. "அம்மா உமது நோயிலிருந்து நீர் விடுவிக்கப்பட்டுள்ளீர்"

…………………………………………………………………………………………..

40. "மண்வெட்டவோ என்னால் இயலாது. இரந்து உண்ணவும் வெட்கமாய் இருக்கிறது"

…………………………………………………………………………………………..

**சரியான விடைகளைத் தெரிவு செய்து இடைவெளி நிரப்புக.**

41. "போதகரே ……………………………………… என்னோடு பங்கிட்டு கொள்ளுமாறு என்………………………………………………………சொல்லும்."

a. சொத்தை b. உரிமையை c. அயலவருக்கு d. சகோதரருக்கு

Index Number ………………………………………… Marks

42. “பெண் ஒருவரிடமிருந்த ……………………………………………… திராக்மாக்களுள் ………………………………………………………………காணாமற் போய்விட்டால் அவர் எண்ணெய் விளக்கை ஏற்றி வீட்டைப் பெருக்கி அதைக் கண்டுபிடிக்கும் வரை கவனமாகத் தேடுவதில்லையா” ?

a. பத்து b. பன்னிரண்டு c. ஒன்று d. மூன்றை

43. “………………………………… கோபுரம் விழுந்து ………………………………… கொன்றதே அவர்கள் எருசலேமில் குடியிருந்த மற்ற எல்லாரையும் விட குற்றவாளிகள் என நினைக்கிறீர்களா?

a. சீலோம் b. சிலோவாம் c. பதினெட்டு d. பன்னிரன்டு

44. “……………………………………………நீங்கள் அஞ்ச வேண்டாம். உங்கள் தந்தை உங்களைத் தம் ………………………………… உட்படுத்த திருவுளம் கொண்டுள்ளார்.”

a. சிறு மந்தையாகிய b. கூட்டமாகிய c. விண்ணகத்திற்கு d. ஆட்சிக்கு

45. “உணவை விட …………………………………………… உடையை விட ……………………………………… உயர்ந்தவை அல்லவா?”

a. உயிர் b. உடல் c. வீடு d. வாழ்க்கை

**மனனம் செய்யும் பகுதி**

46. “ஆனால், அவர் ஆண்டவரின் ……………………………………… மகிழச்சியுறுபவர் அவர் சட்டத்தைப்பற்றி இரவும் பகலும் ………………………………………………”

47. “உம் கைகளே என்னை ……………………… , என்னை வடிவமைத்தன; உம் கட்டளைகளை நான் கற்றுக்கொள்ள எனக்கு…………………………………”

48. “நேர்மையாளரின் ……………………………………………… அவர் பாதுகாக்கின்றார். தம் அடியாரின் ………………………………………………… காவல் செய்கின்றார்.”

Index Number ………………………………………… Marks

49. ‘‘நீங்கள் …………………………… இருந்தால் அதனால் வரும் பயன் உங்களுக்கே உரியதாகும். நீங்கள ஏளனம் செய்வோராய் ……………………………… அதனால் வரும் விளைவை நீங்களே துய்ப்பீர்கள்.’’

50. ‘‘ஆண்டவரைச் சிக்கெனப் ……………………………………... அவரை விட்டு விலகிச் செல்லாதே. உன் வாழ்க்கையின் முடிவில் ………………..………………..அடைவாய்.